75

175

# சென்னை சர்க்காரின்

# கதர்த் திட்டம்

# வெற்றி பெறுமா?

MADR

கோவை. அ. அய்யாமுத்து

M7K
N47
113657

...புகப் பிரசுராலயம்

சென்னை சர்க்காரின்

# கதர்த் திட்டம்

## வெற்றி பெறுமா?

கோவை. அ. அய்யாமுத்து.

"கதர் என்றால் அய்யாமுத்து
அய்யாமுத்து என்றால் கதர்"—ராஜாஜி

நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி : : சென்னை 5

முதற் பதிப்பு ஜனவரி, 1947
உரிமை பதிவு

[விலை அணா 10]

Printed at The Progressive Printers, Madras
FOR NAVAYUGA PRACHURALAYAM
P. I. C. No. 68-A. 3,000—1-47

# சென்னை சர்க்காரின்

# கதர்த் திட்டம்

# வெற்றி பெறுமா?

## முன்னுரை

சென்னை சர்க்கார் கதர்த் திட்டத்தைப் பிரகடனம் செய்ததிலிருந்து, அத்திட்டம் சரிவர நடைபெற்று வெற்றி யடையுமா அல்லது அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள மூன்று கோடி ரூபாயும் வீண் விரயமாகுமா என்று பலர் கேட்கின்றார்கள். கதர்த் திட்டத்துக்கு ஆக்கமளிக்கும் காரணத்தைக் கொண்டு சென்னை சர்க்கார் அமல் நடத்த முனைந்திருக்கும் மில் தடை விஸ்தரிப்புக் கொள்கையும் சரிதானா, புத்திசாலித்தன மானதுதானா என்ற சர்ச்சை களும் கிளம்பியிருக்கின்றன. இதைப்பற்றிப் பத்திரிகை களிலும், மேடைகளிலும், பலர் எழுதியும், பேசியும், விவாதித்தும், தீர்மானங்கள் செய்துமிருக்கின்றனர்.

இப்பிரச்னை பற்றிய எனது அபிப்பிராயம் யாதெனக் கேட்டுப் பல அன்பர்கள் எனக்குக் கடிதம் எழுதியிருக் கிறார்கள். எனது வாழ்க்கையில் பெரும்பாகமாகிய இரு பத்தைந்து ஆண்டுகளை நான் கதரியக்கத்தில் அல்லும் பகலும் ஈடுபடுத்தியுள்ள காரணத்தால், என் கருத்தறிய

அவர்கள் ஆவலுறுவது இயற்கையே. மற்றும் சில காங்கிரஸ் பிரமுகர்கள் நான் சர்க்காரில் பதவியேற்றுக் கதரியக்கத்தை வெற்றிபெறச் செய்யவேண்டுமென்றும் விழைகிறார்கள். எனவே, இத்தருணத்தில் நான் எனது அபிப்பிராயத்தை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது.

மில்களைத் தடுப்பதிலும், கதரைத் தயாரித்து உடுப்பதிலும் காங்கிரஸ்காரர்களுடைய உள்ளத்தில் எவ்வித அபிப்பிராய பேதமும் இருப்பதற்கு இடமில்லை. இக்கொள்கை இந்தியா முழுவதற்கும் பொதுக்கொள்கையாக ஏற்பட்டு, நடைமுறையில் வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதே அனைவருடைய ஆவலும் ஆகும். காந்தியடிகளால் கதரியக்கம் வற்புறுத்தி ஆரம்பிக்கப் பட்டு இருபத்தைந்து ஆண்டுகளுக் கப்புறம், அதன் கொள்கையில் எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. என்னைப் பொறுத்தவரையில் கதரிலே எனக்கு நிச்சய புத்தியுண்டு. ஆனால் நடைமுறையில், சர்க்கா சங்கத்தின் அலுவல்களினாலும், இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு கதர் வர்த்தகத்தை நடத்திவரும் எண்ணற்ற வியாபாரிகளின் வியாபகத்தாலும் கதரியக்கம் நத்தை வேகத்தில் நகர்ந்துகொண் டிருப்பது கண்கூடு. சென்னை சர்க்காரால் கதரியக்கத்துக்கெனச் செலவிடப்படும் பணமும், முயற்சியும், உழைப்பும் இவ்வேகத்தைக் கடுகளவும் அதிகப்படுத்தப் போவதில்லை யென்பதை என் திறந்த கண்களால் காண்கின்றேன். என்போன்ற மற்றவர்களும் தங்கள் கண்களால் இவ்வுண்மையைக் கண்டுணரவேண்டும். பிரதமர் பிரகாசத்துடைய கண்களில், கொஞ்சம் அதிகமான பிரகாசம் ஏற்பட வேண்டும்.

## மகாத்மாவின் முடிவான தீர்ப்பு

கதர்த் திட்டத்தைப்பற்றி ஆராயுமுன், சென்னை சர்க்காரின் மில் தடைக் கொள்கையைப் பற்றிக் கவனிப் போம். "ஹிந்த் சுயராஜ்யா" என்ற புத்தகத்தில் இயந் திரங்களின் தீமையைப் பற்றிக் காந்தியடிகள் சாங்கோ பாங்கமாக ஆராய்ச்சி செய்திருக்கின்றார். மனிதரின் உழைப்பை எளிதாக்கிக் குறைந்த நேரத்தில் சொற்ப மனிதர்களைக் கொண்டு ஆகாயமளாவப் பொருட்களை உற்பத்தி செய்து தள்ளும் இயந்திரங்களாலும், அவற்றின் வளர்ச்சியாலும் சிலர் பணக்காரர்கள் ஆவதற்கும், கைத் தொழில்கள் நசுக்குற்று அவற்றின் துணைகொண்டு பிழைத்திருந்த பல்லாயிரம் பேர்கள் பரதவித்து அலைவ தற்கும், அளவுக்கும் அவசியத்துக்கும் மீறிய அதிக உற்பத்திக்கும், அவ்வுற்பத்தியை நடத்திச் செல்ல மூலப் பொருட்களைச் சேகரித்து உற்பத்தியான பண்டங்களை விற்பதற்கான சந்தைகளை நாடிச் செல்வதால் ஏற்படும் ஆக்ரமிப்புக் கொள்கைக்கும், அதனையொட்டிய நட வடிக்கைகட்கும், அதன் பயனாய் ஏற்படும் அடிமைத் தனத்திற்கும், ஏகாதிபத்ய வளர்ச்சிக்கும், பலத்த போட்டா போட்டிக்கும் இறுதியில் உலக யுத்தங்கட்கும், அணுகுண்டு உற்பத்திக்கும், அதனால் விளையும் கோர மான காட்சிக்கும், மனிதனை மனிதன் இகழ்ந்து வெறுத் துப் பகைவனாகப் பாவிப்பதற்கும் ஹேதுவாகிற தென்று அவர் அப்புத்தகத்தில் விஸ்தரித்து எழுதியிருக்கிறார்.

நான்கு கோடி ஜனங்களைக் கொண்ட பிரிட்டிஷ் தீவுகளில் உள்ள இயந்திரங்களில் உற்பத்தியாகும் சாமான்களை விற்கவும், அந்த இயந்திரங்கள் ஓயாது வேலை செய்வதற்கு வேண்டிய மூலப் பொருட்களை வாரிச்

செல்லவும் வேண்டியே, நாற்பது கோடி மக்கள் வதியும் இந்தியா என்ற தீபகற்பத்தைப் பிரிட்டிஷார், பற்பல அயோக்யத்தனங்களினாலும், அற்பத்தனமான சூழ்ச்சி களினாலும், ஆயிரக்கணக்கான கொடுஞ் செயல்களாலும், இந்திய மன்னர்களையும், மக்களையும் அடக்கி யொடுக்கிப் பிடித்துப் பேயரசாட்சி செய்து வருகிறார்க ளென்றும் மகாத்மா அப்புத்தகத்திலே கூறியிருக்கின்றார். பிரிட்டிஷ் சாமான்களைப் பகிஷ்கரித்துப் பிறநாட்டுத் துணிகளை வாங்கி யுடுத்த இந்தியர் முடிவுகட்டினால், அன்றே பிரிட்டிஷார் தங்கள் மூட்டை முடிச்சுகளுடனும், பெண்டு பிள்ளைகளுடனும் இந்தியாவைவிட்டுக் கப்பலேறி விடுவார்களென்று மகாத்மா கூறியதின் உண்மையை நாம் உணரவேண்டும். கைராட்டினக் கதிரின் கூரிய முனையிலேயே இந்திய சுயராஜ்யம் இருக்கிறதென அவர் சுட்டிக் காட்டியதிலுள்ள சூட்சுமத்தை நாம் அறியவேண்டும்.

மனிதரின் உழைப்பை எளிதாக்கி, மனிதற்கு அதிக ஓய்வும், ஆனந்த வாழ்வும் வாய்க்கச் செய்யவேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் சிருஷ்டிக்கப்பட்ட இயந்திரங்கள், இன்று சில மனிதர் இன்புறவும், பெரும் பான்மையோர் துன்புறவும் உதவுகின்றன. இயந்திரங்களை மனிதன் கட்டி ஆள்வதற்குப் பதிலாக, இயந்திரங்கள் மனிதனைக் கட்டியாளுகின்றன. மனிதனின் இதயத்தைக் கல்லாக்கி மனிதனுக்கு மனிதன் சத்ருவாகச் செய்துள்ளது இயந்திர பூதமென்பதே மகாத்மாவின் கருத்தும், அவரது முடிவான தீர்ப்பும் ஆகும்.

## எது பொருளாதாரம்?

இயந்திரங்களைப் பற்றிய மகாத்மாவின் சித்தாந்தம் ஒருபுற மிருக்கட்டும். குறைந்த ஜனத்தொகையுள்ள

சிறு நாட்டார் இயந்திரங்களை இயக்கிப் பூட்டி, ஏராள மான பண்டங்களை ஆக்கிக் கூட்டி, அவற்றை உலகிலுள்ள பிறநாடுகளுக்குத் தூக்கிச் சென்று காட்டி, ஆங்காங்கு விற்றுப் பொன்னுக்கி, அப்பொன்னில் ஒரு பகுதிக்கு மூலப் பொருட்களைத் தேடிச் சேர்த்து, மூட்டைகட்டித் தங்கள் சொந்த நாட்டிற்கு எடுத்துச் சென்று அங்கு பூட்டி நிற்கும் இயந்திரங்களுக்கு இரையாகக் கொடுத்து விட்டு, எஞ்சிய இலாபத்தைக் கொண்டு எழிலான மனை களில், இணையிலா சுகபோகத்தில் மூங்கி மூழ்கிக் களித்து உல்லாச வாழ்க்கையில் திளைத்திருக்க வேண்டும் என்ற அவர்களது எண்ணம் ஒருபுறம் இருக்கட்டும். யாதொரு சிக்கலும் இல்லாத, எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடிய பொருளாதார நியாயத்தைக் கொண்டு இதனைப் பார்ப்போம். எவ்வெப்பொருள் எங்கெந்த இடத்தில் எளிதாகவும், மலிவாகவும் கிடைக்கின்றதோ அதனை மனிதன் தன் வாழ்வின் நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளல்வேண்டும் என்பதே பொருளாதாரத் தத்துவத் தின் நீதியும் அடிப்படையும் ஆகும். அடர்ந்த காடுகள் அருகில் உள்ளபோது, அதில் வளர்ந்து முதிர்ந்த தேக்கு, கருங்காலி மரங்களைக் கண்ணெடுத்தும் பாராமல், தொலை தூரந் தேடிச் சென்று இரும்பைக் கொணர்ந்து ஒருவன் தன் இல்லம் கட்டினுலும், புழக்கடையில் காய்ந்து குவிந் திருக்கும் விறகை அடுப்பிலேற்றி எரிக்காமல் ஒருவன் நிலக்கரி தேடிக் கொணர்ந்து சமையல் செய்யப் புறப் பட்டாலும், அதனைப் பொருளாதாரத் தற்கொலையென்றே சொல்லுவார்கள். மரத்தைவிட இரும்பு நீடித்துழைப் பதாகவும், விறகைவிட நிலக்கரி அதிக வெப்பம் தருவ தாகவும் இருக்கும் காரணத்தைக் கொண்டு, அருகிலுள்ள

மரத்தையும், விறகையும் வீணுக்கும் ஏற்பாட்டை எவரும் ஆதரிக்கமாட்டார்கள்.

பொருள்களுக்குப் பொருந்தும் நியாயமே மனிதருக்கும் பொருந்தும். இந்நாட்டில் சிதறுண்டு கிடக்கும் ஏழு லட்சம் கிராமங்களில் உள்ள பலகோடி மக்கள் போதிய உழைப்பின்றிச் சோம்பிக் கிடக்கையில், அவர்கள் உழைப்பையும், உழைக்கும் சக்தியையும் பூரணமாகப் பயன்படுத்திக் கொள்ளாமல், குறைந்த மனிதர்களைக்கொண்டு நிறைந்த பொருட்களை உற்பத்தி செய்யும் இயந்திரங்களை, இங்கிலாந்திலிருந்து இங்கு கொணர்ந்து பூட்டுதல் பொருளாதாரத்துக்கு எவ்விதம் ஏற்றதெனக் கொள்ளமுடியும்?

## எதற்கும் ஓர் அளவுண்டு

நவநாகரிகம் முதிர்ந்துள்ள இந்த இருபதாம் நூற்றூண்டிலே, வண்டிகள் ஓட்டுவதற்கு ஏராளமான ஆட்கள் இருக்கின்றூர்கள் என்ற ஒரு காரணத்தைக் கொண்டு, மக்கள் எல்லோரும் கட்டை மாட்டு வண்டிகளில்தான் பிரயாணம் செய்ய வேண்டுமென்றும், இரண்டொரு மனிதரால் இயங்கிச் செல்லும் ரயில்களில் யாரும் ஏறிச் செல்லக் கூடாதென்றும் யாரேனும் சொன்னுல் அது நகைப்புக் கிடமாகும். இயந்திர வளர்ச்சியை முழுவதும் முற்றிலும் தடுக்கவோ, இயந்திரத்தின் உதவியே இல்லாமல் மனிதன் தனித்து வாழவோ இக்காலத்தில் இயலாது.

ஆனுல், எதற்கும் ஓர் அளவுண்டு; எல்லையும் உண்டு. கரும்பு எவ்வளவுதான் ருசியாய் இருந்தாலும் யாரும் அதனை வேருடன் பிடுங்கிச் சாப்பிடுவதில்லை. அமிர்த

மானாலும் அளவுக்கு மீறிப் புசித்தால் அது நஞ்சாக மாறிவிடும். இயந்திரம் மனித வர்க்கத்துக்கு எவ்வளவு பெரிய வரப்பிரசாதமாயிருந்தாலும், அதனை அளவுகண்டு அத்யாவசியமறிந்து பயன்படுத்தாவிட்டால், அதனால் மனிதப் பூண்டே அழிந்துபோக நேரிடும். ரயில்கள், மோட்டார்கள், கப்பல்கள் போன்ற நவீனப் போக்குவரத்து சாதனங்களையும், ஆழமாக உழவல்ல கலப்பை போன்ற விவசாயக் கருவிகளையும், இதர இவைபோன்ற அத்யாவசியமான சாதனங்களையும் இயந்திரத்தின் துணையில்லாது மனிதன் செய்யமுடியாது. இதை யுணர்ந்தே அகில இந்தியாவிலும், எந்தெந்தத் தொழிலை எவ்வாறு உருவாக்கி, எந்த அளவில் எங்கெங்கு நடத்துவது என்பதைப் பற்றித் தீர்க்கமாக யோசித்து வழிகள் காண, பண்டித நேருவின் தலைமையில் பல்லாண்டுகளாய் ஒரு குழுவினர் உழைத்து வருகின்றார்கள்.

## பிரகாசம் அவசரப் படுகிறார்

கதர்த் திட்டத்திலே காங்கிரசுக்கு அசையாத நம்பிக்கை யுண்டு. காந்தியடிகளின் காலத்துக்கு அப்புறமும் காங்கிரஸ்காரர்கள் கதர்த் திட்டத்தைக் கைவிடமாட்டார்கள் என்பது முடிந்துபோன விஷயம். கதர்த் திட்டம் பூரணவெற்றி பெற்றபின் இந்நாட்டில் பஞ்சாலைகட்கு இடமே யிராது. மக்கள் தங்கள் தேவைக்குப் போதுமான ஆடைகளைத் தத்தம் குடிசைகளில் இருந்தபடியே, ஓய்வுள்ள நேரங்களில் தயாரித்துக் கொள்ளமுடியும் என்ற நிலைமை தெளிவாகிய பின்னரும், அதற்குரிய முயற்சிகளைச் செய்யாமல், இந்நாட்டில் புதிய புதிய பஞ்சாலைகளைக் கட்டுவதிலும், இருக்கும் ஆலைகளை விஸ்தரித் [illegible]லும், தேசத்தின் செல்வத்தையும்,

நேரத்தையும் விரயமாக்குவதில் அர்த்தமேயில்லை. இதைக் கருத்தில் கொண்டுதான் பிரதமர் பிரகாசம், கதரைப் பரப்பவும், மில் விஸ்தரிப்பைத் தடை செய்யவும் முனைந்திருக்கிறார். அவரது எண்ணம் சரிதான். ஆனால், முறை சரியில்லை. அவரது கொள்கை சரிதான். ஆனால், முயற்சி தவறானது. எதை முதலில் செய்யவேண்டும், எதை இரண்டாவது செய்யவேண்டும் என்ற தெளிவுடன் அவர் கதர்த் திட்டத்தில் இறங்கவில்லை. எதை எப்படிச் செய்யவேண்டும் என்ற தெளிவான புத்தியும் அவரது திட்டத்தில் இல்லை. இருண்ட அறையில், விளக்கின் துணையின்றி எதையோ தேடப் புறப்பட்டவன் எதிலெதிலோ முட்டி, மோதி அவஸ்தைப் படுவதுபோல, மந்திரி பிரகாசமும் கைராட்டினத்தைத் தேடிச்சென்று மில்களின் உயர்ந்த மதில் சுவர்களிலே தன் மண்டையை மோதிக் கொள்கிறார்.

எத்திட்டமானாலும், தேசமனைத்துக்கும் பொதுவான திட்டமாயிருந்தால்தான் அது வெற்றிபெறமுடியும். கொச்சியிலும், திருவாங்கூரிலும், புதுக்கோட்டையிலும், மைசூரிலும் புது மில்கள் கட்டப்படுகையில், சென்னை மாகாணத்தில் மட்டும் அவற்றைத் தடுப்பதில் புத்திசாலித்தனம் இல்லையெனக் கதரிலே நம்பிக்கையுள்ளவர்களும் இல்லாதவர்களும் சொல்லுவதில் அர்த்தமிருக்கிறது. இதைப்பற்றிப் பிரகாசம் மீண்டும் சிந்திக்க வேண்டும். இந்தியாவில் உள்ள 500 அல்லது 600 பஞ்சாலைகளின் தலைவிதி நிச்சயிக்கப்படும் போது, இயல்பாகவே சென்னை மாகாணத்திலுள்ளவற்றின் கதியும் அவற்றுடன் சேர்ந்து நிச்சயிக்கப்படும் என்பதில் சந்தேகமே இல்லை. பிரகாசம் ஏன் இவ்விஷயத்தில் அவசரப்பட வேண்டும்?

மகாத்மா காந்தியைக் கலந்தாலோசித்ததாகப் பத்திரிகைகளில் வெளிவந்தது. பிரகாசமும், கிரியும் அவர்களது ஜவுளிக் கமிஷனர் வெங்கடேசனும் காந்தியடிகளிடம் என்ன பேசினுர்களென்பது நமக்குத் தெரியாது. எதையோ ஏட்டில் எழுதிக் காந்தியடிகளிடம் காட்டியிருப்பார்கள். காந்தியடிகளால் என்ன சொல்ல முடியும்? கதர் வேண்டாம் என்ற பதிலையும், மில்களை நடத்துங்கள் என்ற பதிலையும் இச்சென்மத்தில் அவரிடமிருந்து யார்தான் எதிர்பார்க்க முடியும்?

காந்திக்கு நல்ல பிள்ளையாவதற்கு வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. காந்தியடிகளின் கடாட்சத்தைப் பெறுவதற்கு மதுவிலக்குத் திட்டம் ஒன்றே போதுமானது. மந்திரி பிரகாசம் தம் மாகாணத்திலுள்ள மதுவரக்கனைக் கொன்று வீழ்த்தினுல், மகாத்மா காந்தி தம் பொக்கைவாயைப் பிளந்துகொண்டு பிரகாசத்துக்கு "ஜே" போடுவார். மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்ற கண் மூடித்தனமான போக்கில், பிரகாசம் மேற்கொண்டுள்ள தவருன திட்டத்தை விடாப்பிடியாக அமல் நடத்துவாரேயானுல், அவர் படு தோல்வி அடையப்போவது நிச்சயம் என்பதை நான் பிரத்யட்ச நிலை தெரிந்து கூறுகிறேன். அத்தோல்வியைக் கண்டு மகாத்மா, பிரகாசத்துக்கு "பே" தான் போடுவார். பிரகாசத்துக்குக் கிடைக்கவிருக்கும் "ஜே"யைப்பற்றியோ "பே"யைப்பற்றியோ யாரும் கவலைப்படப்போவதில்லை. ஆனுல் அவரது அவசரத்தால், அறியாத் தனத்தால் கதரியக்கந் தோல்வியுறுகையில், மக்களுக்குக் கதரின்மீது வளர்ந்துள்ள நம்பிக்கையும் தேய்ந்து போவது கண்டே எல்லோரும் கவலைப்படுவார்கள்.

கதரையே நாடெங்கும் பரப்பவேண்டுமென்பதிலும், கதருக்கு எதிராகத் தோன்றி வளர்ந்துவரும் மில்களை யெல்லாம் உடைத்துத் தகர்த்தெறிய வேண்டுமென்பதி லும் பிரகாசத்தைவிட எனக்கு அதிகமான ஆசை மூளு கிறது. அவரைக் காட்டிலும் நான் இவ்விஷயத்தில் அதிக அவசரமும், ஆத்திரமும் உடையவனாக இருக்கிறேன். கதரைப் பற்றிய எனது கருத்துக்களை மகாத்மா காந்தி யடிகளுக்கு நான் தெரிவித்தபோதெல்லாம் அவர் :

"நீ அயர்வறியாத உழைப்பாளி. உனக்குள்ள ஆர்வம் அபாரமானது. திறனும் பெரியதே. எனினும் அவசரப் படுகிறாய். ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு என்பதை நீ அறியமாட்டாயா? நிதானமாக ஒவ் வொரு படியாக எடுத்துவைத்து முன்னேறு."

என்று எனக்கு எழுதியிருக்கிறார். ஹரிஜன் பத்திரிகை யின் இதழ்களிலும் என்னைப் பற்றி இதே கருத்துக்களை வெளியிட்டு மிருக்கிறார். நான் ஆத்திரமும் ஆவேசமும் நிரம்பியவன் என்று மகாத்மா என்னைப் பற்றிச் சொன்ன தெல்லாம் உண்மை. ஆனால், பிரதமர் பிரகாசம் இவ் விஷயத்தில் என்னையுந் தோற்கடித்துவிட்டார் என்று தான் சொல்ல வந்தேன்.

## மில்கள் ஏன் கூடாது?

பரந்த வெளியிலே, பரிசுத்தமான காற்றோட்டமும், பற்பல வகையான இயற்கைவனப்பும் சூழ்ந்துள்ள சுற்று வட்டாரத்திலே, உவகையுடன் உழைத்து, உற்றார் உற வினருடன் கூடிச் சுகித்து வாழ்ந்துவந்த என் கிராம மக்கள், அந்நல்வாழ்வை விடுத்து, அவர்கள் பாரம்பரிய

மாய் வசித்திருந்த வீட்டையும், வளங்கொழிக்கும் காட்டையும் துறந்து, நகரமெனும் நரகத்துக்குச் சென்று, பஞ்சாலையென்னும் மில்களிலே புகுந்து, நாற்புறமும் சிறைபோல் உயர்ந்த மதிலெழுப்பிய கட்டிடங்களுக்குள்ளே, பலமான காவலுக்கும், கடுமையான கட்டு திட்டங்கட்கும் அடங்கி யொடுங்கி, உஷ்ணம் தலைக்கேற, மூச்சுத்திணற, கண்கள் எரிந்து சிவக்க, கால்கள் கடுத்து உடலும் வியர்க்க, உள்ளம் புழுங்கி வயிறும் காய, பத்து மணி நேரம் ஓயா துழைத்துவிட்டு, சந்திலும் பொந்திலும் நுழைந்து, சாக்கடை நாற்றம் வீசும் சிறிய அறைகளில் கொசுக் கடிக்கும், மூட்டைப் பூச்சிக்கும் ஆளாகி வதியும் காட்சியை எண்ணும் போதெல்லாம் என் உடல் சிலிர்க்கிறது.

காலையிலே சங்கு ஓசை கேட்டதும் கூட்டங் கூட்டமாய், ஆண்களும் பெண்களுமாய்த் தலைவிரி கோலமாய், நகரத் தெருக்களிலே துரித நடையில் ஓடுவதையும், பகலிலே இடைவேளையிலே மில்களின் எதிர்ப்புறமுள்ள சாக்கடையோரங்களிலே அவர்கள் வீற்றிருந்து உண்பதையும், வேலைமுடிந்தபின் அந்திப்போதிலே, கண்கள் இருண்டு, முகம்வாடி, உடல் சோர்ந்து, நடை தளர்ந்து, அவர்கள் தங்கள் கொட்டறைகளை நாடித் திரும்புவதையுங் காணுந்தோறும் என்னுள்ளம் குமுறுகிறது.

அதிகாலையிலே, கிராமங்களிலே உழவோட்டச் செல்லும் குடியானவர்களைப் பாருங்கள்! களை மிகுந்த அவர்கள் முகத்தைக் காலைக் கதிரவன் முகத்துடன் ஒப்பிட்டுக் கூறுதல் குற்றமாகாது. காடு கரைகளில் எவ்வளவு உற்சாகத்தோடு வேலை செய்கிறார்கள்! எதுகை நிரம்பிய அவர்கள் ஏற்றப்பாட்டையும், தெம்பு நிறைந்த

அவர்கள் தெம்பாங்குகளையும், தேன் கசிந்தொழுகும் காவடிச் சிந்தையும் கேட்டாலே உள்ளங் களிப்புறும். ஏரை விட்டபின் குடியானவனும் அவன் மனைவியும் மாமரத்தடியில் வீற்றிருந்து பழைய அமுதுண்டு, பாக்குக் கடித்துப் பலவகைக் கதைகள் பேசுவதை, அப்பேச்சிலும், அவர்கள் தோற்றத்திலும் கனியும் இன்பத்தை மரக்கிளை மீதுள்ள பசுங்கிளியும் கண்டு கேட்டு இன்ப முறும். சின்னப்பையன், குடியானவனின் கடைசிக் குட்டி, ஆட்டுக்குட்டி யொன்றைப் பிடித்து அட்டகாசம் செய்து கொண் டிருப்பான். மூத்த பையன், நேற்று மாதம் கல்யாணமானவன், தன்னிளம் மனைவியுடன் தோட்டத்துச் சாலையில் இகத்தின் சுகத்தை இன்புற அனுபவித்துக் கொண் டிருப்பதைக் கண்ட சிறு அணில் தன் வாலைத் தூக்கிக் கூத்தாடிக்கொண் டிருக்கும். இக் குடியானவர்களுக்கு எத்தனை சுதந்திரம்! அவர்கள் இஷ்டப்பட்ட போது வேலை செய்யலாம். இஷ்ட மில்லாதபோது, சும்மா வீற்றிருந்து வெற்றிலை பாக்கை மென்றுகொண் டிருக்கலாம். அதிக வேலையுள்ளபோது ஆளுக்கொன் ருய்ப் பங்கிட்டுச் செய்யலாம். அண்டை அயலில் உள்ளவர்களை உதவிக் கழைக்கலாம். விருந்தினரை எந்த நேரத்திலும் வரவேற்கலாம்; உபசரிக்கலாம். கிராமத்தில் ஒரு பெரிய காரியமென்ருல், வரிந்து கட்டிக்கொண்டு முன் செல்லலாம். சூரிய வெளிச்சத்தையும், சுத்தமான தென்றலையும் தேடாது இன்புறலாம்.

ஆனல், இதே குடியானவன் தன் குடும்பத்துடனே, அல்லது தன்னந் தனியனுகவோ, கிராமத்தை விடுத்து நகரத்துக்கேகி, மில்லில் சேர்ந்து பாட்டாளி மக்களின் பட்டாளத்தில் கலந்தால், அந்தோ! அவன் நிலைமை

எப்படி மாறிவிடுகிறதென்று பாருங்கள்! இயற்கைத் தேவியின் எழிலிலே மயங்கிக்கிடந்த அவன், இயந்திர பூதத்தின் சந்நிதானத்தில் புழுங்கி நிற்கவேண்டும். தென்னைமரக் குயிலின் இன்னிசை கேட்டு இன்புற்ற அவன் செவிகள், இயந்திரப் பேய்களின் இரைச்சலால் செவிடுபடும்.

நகர்ப் புறங்களிலே காணப்படும் ஏழடக்கு மச்சையும், இருண்ட சிறு குச்சையும் கிராமங்களிலே காண முடியாது. மலைக்கும் மடுவுக்கும் போன்ற வேற்றுமைகள் அங்கில்லை. பெரிய குடியானவனுடைய வீடு, பெரிய தொட்டிக்கட்டுள்ளதா யிருக்கலாம். பண்ணையாளின் வீடு, இரண்டறைகளும் சிறு திண்ணையும் கொண்டதாக விருக்கலாம்; அல்லது கீற்றுக் குடிலாகவும் இருக்கலாம். உடைகளிலும் பெரிய தாரதம்ய மிருக்காது. உண்டியும் அப்படியே. கல்யாணம், கல்லெடுப்பு, தேர், திருவிழா எதுவானாலும் கிராமத்திலே உள்ள குடியானவர்கள், பண்ணையாட்கள், கூலியாட்கள் எல்லோரும் ஒரே குடும்பத்தினர் போன்று கூடுவார்கள். ஏழை வீட்டில் பிணம் விழுந்தாலும், பணக்காரன் வீட்டில் பிணம் விழுந்தாலும், அப்பிணம் காடு சேருமுன் அக் கிராமத்தில் எவரும் சாப்பிட மாட்டார்கள். அவ்வளவு ஒற்றுமை! அவ்வளவு சௌஜன்யம்! அவ்வளவு சமத்வ உணர்ச்சி கிராமச் சூழ்நிலையில் உண்டு.

ஆனால், இந்நிலையோடு நகர நிலையை ஒப்பிட்டுப் பாருங்கள். இன்று கிராமத்திலே மம்மட்டி யெடுத்துக் கூலிவேலை செய்யும் ஓராள், எப்போதாவது தானும் ஒரு நாள் சொந்தமாக ஓர் ஏர் பூட்டிப் பண்ணயம் நடத்த முடியும் என்ற நம்பிக்கையோடு தன் வாழ்க்கையை

நடத்துகிறான். அண்டை அயலார்மீது அவனுக்கு வெறுப்பில்லை. பண்ணையகாரன்மீது அவனுக்குத் துவேஷமில்லை. பண்ணையகாரனுடைய வீட்டின் வழியே அவன் செல்லும்போது, அவ்வீட்டைக் கண்டு அவன் வயிறெரிவதில்லை. அவ் வீட்டுக்குள் அவன் தாராளமாகச் செல்லலாம். வெற்றிலை பாக்குக் கேட்டாவது வாங்கிப் போட்டுக்கொள்ளலாம். பண்ணையகாரன் மனைவியிடத்திலும் தாராளமாய்ப் பேசலாம். தனக்கு வேண்டியதைக் கேட்கலாம், பெறலாம், திருப்பிக் கொணர்ந்தும் கொடுக்கலாம். ஆனால், பஞ்சாலையில் வேலை செய்யும் ஒரு சாதாரணத் தொழிலாளி, தன் மில் முதலாளியின் வீட்டருகே நெருங்க முடியுமா ? பத்து லட்சம் ரூபாயில் கட்டப்பட்டுள்ள மில் முதலாளியின் பங்களா எங்கே? எட்டணுக் குடிக்கூலிக் கிருக்கும் அவ்வேழை மகனுடைய எலிவங்கு எங்கே ? முதலாளியோடு தொழிலாளி நெருங்கிப் பேச முடியுமா ? அவன் பங்களாவுக்குள் நுழைய "வாட்சுமேன்" அனுமதிப்பானா ? அவன் அனுமதித்தாலும் முதலாளியின் நாய் சும்மா இருக்குமா ? முதலாளியின் மனைவியிடத்திலாவது தொழிலாளி சென்று தன் குறைகளைச் சொல்லிக்கொள்ள முடியுமா ? முதலாளியின் மாளிகையை அவன் தெருவில் நின்றவாறே தலை தூக்கிப் பார்த்துக் கொட்டாவி விடத்தான் வேண்டும். முதலாளியின் மாளிகையைக் கடக்குந்தோறும் அவனுடைய மனதிலே எரிச்சல் கிளம்பும். தன்னை வேலையில் சேர்த்து வைத்திருக்கும் முதலாளியிடத்தில் அவன் அன்பு கொள்ளாமல், அவனையும் அறியாமல் பகைமையே உதிக்கும். மில் முதலாளிகளின் வீடுகளில் நடைபெறும் கலியாணம், காது குத்தல் போன்ற வைபவ விசேஷங்கட்குத் தொழிலாளிகள்

அழைக்கப்படுவதில்லை. மில் முதலாளி ஒருவன் இறந்துவிட்டால் அவனுக்காக எந்தத் தொழிலாளியும் கண்ணீர் கசிவதுமில்லை. இந்தியாவிலே ஆட்சி செலுத்தும் வெள்ளை அதிகாரிகட்கும் கருப்புப் பிரஜைகட்கும் இடையில் எவ்வளவு உறவு உண்டோ, அதே அளவு உறவுதான் முதலாளிக்கும் தொழிலாளிக்கும்.

ஆங்கில அதிகாரம் இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமெனத் தேச பக்தர்கள் சொல்லுவதுபோல, மில்களிலிருந்து முதலாளித் தெய்வம் வெளியேற வேண்டுமெனத் தொழிலாளர் தலைவர்கள் சொல்லுகிறார்கள். இந்தியாவை இந்தியரே அரசாள வேண்டும் என்று சொல்லுவதுபோலப் பஞ்சாலைகளைத் தொழிலாளர்களே தங்களுக்குச் சொந்தமாக நடத்தவேண்டுமென அவர்கள் சொல்லுகிறார்கள். பஞ்சாலைகள் தனிப்பட்ட ஒருவனுக்கோ, சிலருக்கோ அல்லது ஒரு கூட்டத்தாருக்கோ, யாருக்கோ எப்படிச் சொந்தமானாலும், அவற்றை இந் நாட்டில் வைத்திருக்கக் கூடாதென்றுதான் காந்தியார் சொல்லுகிறார்.

"கிராமத்துக்குத் திரும்பிப்போ" என்று காந்தியார் கூறியபோது, அவர் நகர்ப்புறங்களிலுள்ள படித்தவர்களையும், அறிவாளிகளையும், பரோபகார சிந்தையுள்ளவர்களையும் மாத்திரம் மனதில் எண்ணிக்கொண்டு சொல்லவில்லை. நகர்ப்புறங்களுக்கு வயிற்றுப் பிழைப்பை நாடிவந்துள்ள எல்லோரும் திரும்பிச் செல்லவேண்டும் என்று தான் சொல்லுகிறார். கிராமங்களுக்கு யார் போனாலும் போகாவிட்டாலும் பஞ்சாலைத் தொழிலாளர் எல்லோரும் போயே தீரவேண்டும் என்று நானும் சொல்கிறேன்.

இவ்வுண்மை யறியாத மந்திரி பாஷ்யம், மில்களில் உற்பத்தியாகும் துணியைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்போவதாகக் கூறியது கேலிக்கூத்தா யிருக்கிறது. இவர் அனுப்பவிருக்கும் துணியைப் பிற நாட்டார் வாங்க மறுத்தால், துப்பாக்கி முனையில் பலவந்தப்படுத்தி வாங்க வைப்பேன் என்று அவர் சேர்த்துச் சொல்லி யிருந்தால் அது அபாரமாயிருந்திருக்கும்! மில்கள் நமது கொள்கைக்கு முரணாகும்போது அவற்றை மூடிவிடவேண்டுமே யல்லாமல் அவற்றை நடத்தி அத் துணியைக் கப்பலேற்றுவே னென்பது சிரிப்பிற்கிடமானது. ஒருவன்:—"நான் விபசார விடுதிகளைத் தடுப்பேன். என்றால் தடுக்க முடியாவிடில், அந்நிய நாட்டாருக்காக மட்டும் அதை நடத்துவேன்" என்று சொன்னால் எப்படியிருக்குமோ அப்படி யிருக்கிறது என் நண்பர் பாஷ்யத்தின் கூற்று.

எக்காரணத்தைக் கொண்டும் பஞ்சாலைகள் இந்நாட்டில் எங்கும் இருக்கக்கூடாது. பஞ்சாலை இந்திய நாட்டுக்கு அவசிய மில்லாதது; இந்தியரின் பண்புக்கு ஒவ்வாதது; இந்தியருடைய மானாபிமானத்துக்குப் புறம்பானது; இந்திய மக்களின் வாழ்வையும் மனோ தர்மத்தையும் சிதைப்பது; தொழிலாளி-முதலாளி என்ற அவசியமில்லாத இரண்டு வர்க்கங்களைச் சிருஷ்டித்து வர்க்கப்போரை உண்டாக்கி வளர்ப்பது; 'கம்யூனிசம்' என்ற பெயரால் காலித்தனம் வளர அனுகூலிப்பது; மக்கள் மனதில் நஞ்சூட்டுவது; மக்களிடையே ஊன்றிக் கிடக்கும் நல்லுறவை வேரறுத்து, மக்களை மிருகங்களாக்குவது; துவேஷம், பகைமை, அமைதியின்மையாகிய கொந்தளிப்பைத் தோற்றுவிப்பது; பொய்மை, விபசாரம், வஞ்சகம் ஆகிய பாதகங்களுக்குப் பிறப்பிடமும்

இருப்பிடமும் ஆனது; மக்களின் ஆரோக்கியத்தைக் கெடுத்து அற்ப ஆயுளில் மடியச் செய்வது; கிராம மக்களை நாடோடிகளாகச் செய்வது; இந்தியாவின் பிரதமக் கைத்தொழில்கள் இரண்டுக்கு எதிரானது; கை நெசவாளரின் வாழ்வைப் பறித்து, அவர்களைச் சீரழித்துப் பஞ்சைகளாக்க வல்லது; ஆகவே, நூல் நூற்பு மில்களும் துணி நெசவு மில்களும் ஒழியத்தான் வேண்டும்.

## மலையைக் கல்லி எலியைப் பிடிப்பானேன்?

மேலே சொன்ன தீங்குகளனைத்தும் இதர இயந்திரத் தொழில்களில் இல்லையா என்ற கேள்வி எழலாம். ஆம், ஓரளவுக்கு உண்டு. ஆனால், மனித வாழ்வுக்கும் தற்காலச் சூழ் நிலைக்கும் அத்தொழில்கள் இன்றியமையாதவை. அவற்றால் மனித சமுதாயம் அடையும் பெரு நன்மையுடன் ஓரளவு தீமையையும் சேர்த்தே அனுபவிக்காமல் தீராது. ஆனால், பஞ்சாலைத் தொழில் அத்தகைய மிக மிக அத்யாவசியமான, இன்றியமையாத தொழில் அல்ல. அத்தொழிலை இந்திய சமூகம் எளிதில் தவிர்த்து அதன் தீமைகளுக்குச் சிறிதும் ஆளாகாமல், தனது துணித்தேவையை வேறு இலகுவான முறையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும் என்றுதான் சொல்லுகிறேன். ஒரு மனிதனுக்கு வேண்டிய நான்கு வேஷ்டி, நான்கு சட்டைகளுக்காகவும், ஒரு மனுஷிக்கு வேண்டிய நான்கு புடவை ரவிக்கைகளுக்காகவும், அவர்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகளுக்கு வேண்டிய ஓரளவு துணிகளுக்காகவும் இவ்வளவு பெரிய மூலதனத்தில் இவ்வளவு பெரிய மில்கள் கட்டி, முகமதலி ஜின்னா பாகிஸ்தானுக்கு முஸல்மான்களைக் குடிபெயரச் சொல்லுவதுபோல, கிராம மக்களை அவர்கள் வேரூன்றி வாழும் கிராமங்களிலிருந்து

மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேற்றி, நகர்ப்புறங்கள் என்ற நரகப் புறங்களில் அடைத்து வைக்க வேண்டிய அவசியம் இல்லையென்றுதான் சொல்லுகிறேன். அக் கிராம மக்கள் தங்கள் பிறப்பிடமும் இருப்பிடமுமாகிய கிராமக் குடிசைகளில் இருந்தவாறே நமது நாட்டின் துணித் தேவையைப் பூர்த்தியாக்க முடியும்; முடியும் என்று மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன். இதற்காக மலையைக் கல்லி எலியைப்பிடிக்க முயன்றதுபோல, நான்கு முழத் துணிக்காக நாலாயிரம் மில்களைக் கட்டி, அவற்றில் நாற்பது லட்சம் ஆண்களையும் பெண்களையும், சிறுவர் சிறுமியர்களையும் அடைத்துவைத்து அல்லும் பகலும் வேலை வாங்கத் தேவையில்லை யென்றுதான் சொல்லுகிறேன். ஐம்பதினாயிரம் கதிர்கள் ஏககாலத்தில் ஒரே கட்டிடத்துக்குள் இரைச்சலிட்டுக்கொண்டு சுற்றினால் தான் நமது துணித்தேவை முற்றிலும் பூர்த்தியாகு மென்று யாராவது எண்ணினால், சொன்னால், அவனை அந்நிய நாட்டுக்குக் கப்பலேற்றி அனுப்பிவிடவேண்டும்.

பாட்டாளி மக்களையெல்லாம் ஒன்று சேர்த்து, அவர்கள் மனதில் துவேஷத் தீயை மூட்டி, புரட்சிக் கனலை வீசச் செய்தால்தான், அப் பாட்டாளி மக்கள் புரட்சி செய்து, அந்நிய-இந்திய-வெள்ளை-கருப்பு-முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை வீழ்த்திக் கைப்பற்றி, அவ் வரிய முயற்சியில் சிந்திய இரத்த வெள்ளத்தில் தங்கள் வஸ்திரங்களைத் துவைத்தெடுத்துச் செங்கொடியாக்கி, அதனை உயர்த்திப் பறக்கச் செய்ய முடியுமென்று யாரோ, எங்கோ எழுதிவைத்துள்ளதை அரைகுறையாகப் படித்துவிட்டு, இந் நாட்டில் சில தோழர்கள் ‘கூட்டுத்தொழில், இயந்திர வளர்ச்சி, முற்போக்கு, முன்னேற்றம், வர்க்கப் போராட்டம், வேலை நிறுத்தம்’ எனக்

கத்திக் கத்தித் தங்கள் வயிற்றை நிரப்பிக்கொண்டு திரிகிறார்கள். அதே சமயத்தில் கதரையுங் கட்டிக் கொள்ளுகிறார்கள். குதிரை வண்டி, கை வண்டி, கட்டை மாட்டு வண்டி, ரிக்ஷா வண்டித் தோழர்களையும் ஒன்று சேர்த்து அவர்களுக்காகப் பரிந்து பேசி, முதலைக் கண்ணீர் வடித்துச் செங்கொடிக்குச் 'சே' போடச் செய்கிறார்கள்!

ஒரு தீமையைப் போக்க, மற்றொரு, அதனினும் பெரிய தீமையைச் சிருஷ்டிக்க வேண்டிய அவசியம் இந்நாட்டில் இல்லை. அந்நிய ஆட்சி என்ற கொடிய அரக்கனை சத்தியம், அஹிம்சைபோன்ற சாந்தமும் சமாதானமும் நிறைந்த முறைகளால் முறியடிக்கத் தீர்மானித்து, துணிந்து ஓரளவு வெற்றியும் பெற்றுவரும் இந்திய மக்கள், எல்லா மக்களுக்கும் உழைப்பும், பிழைப்பும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகக் 'கூட்டுத்தொழில்' என்ற சனியனை ஏற்படுத்தி, தொட்டதற் கெல்லாம் வேலை நிறுத்தம், குழப்பம், வசைமாறி, குண்டுமாறி, தடியடி, விஷப்புகை யாதிகளை ரத்தம் சிந்தியும் உயிரைக் கொடுத்தும் விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லை. ஒரு மாதம் இரண்டு மாதம் மில்களில் வேலை நிறுத்தம் செய்யச் செய்து, அவ்வேலைநிறுத்த காலத்தில் 'பாட்டாளி' மக்களைப் பட்டினி போட்டு, அவர்கள் தங்கள் நகை நட்டு, பொட்டுப் பொடி எல்லாவற்றையும் விற்றுக் கடனும் பட்டு, போலீசாரின் தடியடி பட்டு, சிலரைப் பலியு மிட்டு, சிறைக் கம்பிகளை எண்ணவுஞ் சென்று இறுதியில் பெற்ற 'வெற்றி', மாதம் பதினைந்தாயிருந்த வெள்ளிக் காசுகள் பதினாறாக உயர்ந்ததுதான். ஆயிரம் தொழிலாளிகள் அறுபது நாட்கள் வேலைக்குப் போகாததால், அவர்கள் அறுபதுநாள் சம்பளமும் படியுமாக மொத்தம் அறுபதினாயிரம் ரூபாயை இழந்துவிட்டு, அவர்

கள் பெற்ற லாபம் தலைக்கு ஒன்றாக ஆயிரம் ரூபாய்! வேலைநிறுத்த காலத்தில் இவர்கள் இழந்த சம்பளத்தை, இவர்கள் அடைந்த சம்பள உயர்வைக்கொண்டு ஈடு செய்ய அறுபது மாதங்கள், அதாவது ஐந்து ஆண்டுகள் செல்லும்!

இவ்வாறாகக் கூட்டுத்தொழில் வீரர்கள் தொழிலாளி மக்களுக்கு வீண் ஆசைகள் காட்டி, அவர்கள் நெஞ்சில் விஷத்தையூட்டி, வேலைநிறுத்த மென்ற அபாயகரமான ஆயுதத்தை விளையாட்டுத்தனமாக அடிக்கடி கையி லெடுக்கச் சொல்லி நகர்ப்புறங்களை யெல்லாம் நரகப் புறங்களாக்கி வருவதோடு, தொழிலாள மக்களை வீண் அவதிக்கும் கஷ்ட நஷ்டங்கட்கும் ஆளாக்குவதல்லாமல், பொது மக்களுக்கும் நெருக்கடிகளை உண்டாக்கி விடு கிறார்கள். இம்மதிகெட்ட காரியத்தை நடத்துவதற்காக இவ்வீரர்கள், தொழிலாளர்களிடமிருந்து மாதா மாதம் ஆயிரக்கணக்கில் சந்தா வசூலித்துச் செஞ்சட்டைகள் மாட்டித் தலைவர்களாகி விடுகின்றனர்! மில்களை ஒழிக்க ஆயிரங் காரணங்கள் இருப்பினும், இவ்வொரு காரணத் துக்காகவேனும் அவைகளை மூடினால்தான் நாட்டுக்கும் மக்களுக்கும் நலம் உண்டாகும்.

## செய்ய வேண்டியது என்ன?

அமைதியின்மைக்கும், ஆதிக்கப் போட்டிக்கும் ஆஸ்பதமான இயந்திரங்களை மூடிவிட வேண்டும் என்று எண்ணிய மாத்திரத்தில், இன்றுள்ள நிலையில், அவற்றை மூடிவிட முடியாது. அவற்றை மூடு முன் செய்யப்படவேண்டிய காரியங்களும், சிந்திக்கப்பட வேண்டிய விஷயங்களும் எவ்வளவோ இருக்கின்றன. கிராம மக்களும், தொழிலாளர் கூட்டமும் கேப்பையைக்

கரைத்துக் குடித்துக்கொண்டு கீற்றுக் குடிசைகளில் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற காலம் மலையேறிப் போய் விட்டது. மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும். கிராமங்களுக்கு நல்ல பாதை, நாசுக்கான வீடுகள், சிறந்த பாசனவிகள், செழிப்பான பூமிகள், சீராய் அமைக்கப் பட்ட கல்வி, கைத்தொழில், வர்த்தக ஸ்தாபனங்கள் ஏற்பட்டாக வேண்டும்.

இவ்வரிய பெரிய காரியங்களைச் செய்து முடிக்கப் பல்லாண்டுகள் செல்லும். மக்களின் அறியாமையி லிருந்து அந்நிய ஆட்சியின் தீமை வரையுள்ள பல முட்டுக் கட்டைகளையும் தட்டுத் தடைகளையும் தாண்டித் தேசத் தின் புனர் நிர்மாண வேலைகள் செய்யப்பட வேண்டி யிருக்கிறது. இவற்றையெல்லாம் தீவிரமாக ஆராய்ச்சி செய்யாமல், பிரகாசம் பந்துலுகாரு அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விட்டது தமிழனைத் தூக்கி வாரிப் போட்டு விட்டது.

அரசமரத்தைச் சுற்றினவுடனே அடிவயிற்றைத் தொட்டுப் பார்ப்பதில் அர்த்தமே இல்லை. தொட்டுப் பார்ப்பதுடன் நில்லாமல் மருத்துவச்சிக்கும் ஆள் அனுப்பிவிட்டால், அப்புறம் அதைப்பற்றி என்ன சொல்லுவது? கதருக்காக மூன்று கோடி ரூபாயை ஒதுக்கியவுடனே, "நிறுத்தடா உன் விஸ்தரிப்பை" என்று பிரகாசம் கூறத் தொடங்கிவிட்டார்!

கிராமங்களில் இன்று சுழன்றுவரும் சிறிய ராட்டை யைக்கொண்டே மில்களை மூடிவிட முடியும் என்று பிரகாசங்களும், கிரிகளும் எண்ணிக்கொண் டிருந்தால், எண்ணுவதுடன் நில்லாது அதில் மூன்று கோடி ரூபா யைப் பாழ்ப்படுத்தும் வேலையில் முனைந்தால் குருடனுக்

குக் குருடன் வழிகாட்டிய காட்சியைத்தான் காண முடியும். இன்றுள்ள கைராட்டினம், இன்று உபயோகத்தில் இருந்துவரும் கைராட்டினம், பிரதமர் பிரகாசம் அவர்களால் புதிதாகச் செய்யப்படுவதாக நான் கேள்விப் படும் ஒரு லட்சம் கைராட்டினம், கதருக்கு உலை வைக்குமே அல்லாமல் கதரை உருவாக்க முடியாது. கதர் மீண்டும் இந்நாட்டின் ஜீவநாடியாக விளங்கவேண்டுமானால், காலத்திற்கேற்ற கைராட்டின மொன்றை உடனடியாகச் செய்ய முற்படுவதே முதலில் செய்யப்பட வேண்டிய புத்திசாலித்தனமான செய்கையாகும். மற்றதனைத்தும் மடத்தனத்துக்கு ஆஸ்பதமாக முடியும்.

## கைராட்டினத்தின் உட்கருத்து ?

அந்நிய நாடுகளிலும், நமது நாட்டிலும் ஏற்பட்ட மில்களின் போட்டியைச் சமாளிக்க முடியாத காரணத்தால், கைராட்டினம் அழிந்து போனதென யாவரும் எளிதில் சொல்லிவிட முடியும். ஆனால் இன்றுள்ள மில்களின் போட்டியைச் சமாளித்துக் கைராட்டினம் தலை தூக்க வேண்டுமானால், அதற்குப் புதிய சக்தியும், புதிய விசையும் நாம் முதலில் கொடுத்தாகவேண்டும். சமமும் முறுக்கு முள்ள நூலையே வேகமாக நெசவு செய்து கை புழகிப்போன நெசவாளிக்கு ஏற்ற நூலை நூற்றுக் கொடுக்கவல்ல கைராட்டினம் நமக்கொன்று ஏற்பட்டால் தான் அது எதிர்காலத்திலாவது அழியாமல் தலை தூக்கி நிற்கமுடியும். அரசாங்கச் சட்ட வலுவினால் இப்போதுள்ள மில்களுக்கு உலைவைக்க முடிந்தாலும், எதிர்காலச் சூழ்நிலையில் இப்போதிருக்கும் கைராட்டினம் நெட்டுயிர்பெற்று நீடித்திருக்க முடியாது.

இப்போதிருக்கும் கைராட்டினமும் ஓர் இயந்திரமே. அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். மனிதன் தன் இரு கைகளாலே பஞ்சைச் செப்பனிட்டுப் பட்டைபோட்டுத் தன் தொடையிலே வைத்துத் திரித்துக் கோலில் நூலிழைத்துச் சுற்றுவதை எளிதாக்கி, விரைவாக நூற்கும் பொருட்டு கைராட்டினத்தைக் கண்டு பிடித்தான். அதில் ஒரு கதிர் பூட்டி, ஒரு சக்கரத்துடன் இணைத்து நூல் நூற்கும்படி செய்தான். பஞ்சாலைகளிலும் இதே முறையைத்தான் காண்கிறோம். அங்கும் ஒரு சக்கரம் சுழலக் கதிர் ஆடுகின்றது. ஆனால், ஒரு கதிருக்குப் பதிலாக ஓராயிரம் கதிர்களை ஒன்றாகச் சுழலச் செய்யும் வல்லமையுடையதாய் அது இருக்கிறது. கைராட்டினத்தில், ஆயிரம் கதிர்களை ஓட்ட ஆயிரம் மனிதர்கள் வேலை செய்யவேண்டும். ஆனால் பஞ்சாலையில் ஆயிரங் கதிர்களில் இழைகள் அறுந்து போகாமல் பார்த்துக் கொள்வதற்காகப் பத்து ஆட்கள் இருந்தாலே போதுமானது. இதுவே இரண்டுக்குமுள்ள வித்யாசம்.

ஆயிரம் ஆட்கள் நம்மிடம் வேலையில்லாமல் சும்மா இருக்கும்போது, அவர்களில் பத்து நபருக்கு மாத்திரம் பஞ்சாலையில் வேலை கொடுத்துவிட்டுப் பாக்கியுள்ள 990 நபர்களை நாம் ஏன் சும்மா வைத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பதுதான் கேள்வி. பத்துப்பேர் முன்னிலையில் ஓராயிரம் கதிர்களை ஓடச்செய்யும் இயந்திர பூதத்தின் தலையில் ஓர் அடியைக் கொடுத்து அதை நிறுத்திவிட்டு, அதில் உள்ள ஆயிரம் கதிர்களையும் ஆயிரம் ராட்டினங்களில் ஆயிரம் பேர்களுக்கும் ஆளுக்கொன்றாகக் கொடுத்து வேலைசெய்யச் செய்ய வேண்டுமென்பதுதான் கதரியக்கத்தின் உட்கருத்தாகும். மற்றும், இவ்வாயிரம் பேர்களும் பஞ்சாலையைப் போல் ஒரே இடத்திலிருந்து

வேலை செய்துவிட்டு, அப்பஞ்சாலைக் கருகிலுள்ள பிரதேசத்தில் ஆடுமாடுகளைப்போல் அடைபட்டுக் கிடக்காமல், அவரவர்களுக்குச் சொந்தமான ஊர்களில் உள்ள வீடுகளில் சென்று வசித்துக் கொண்டு வேலை செய்து வரலாம்.

பெரிய பஞ்சாலை கட்டிவிட்டால், அது நிற்காமல் சதா ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். தேவைக்கு மீறி உற்பத்தியாகி விட்டதென்ற காரணத்தைக்கொண்டு அதனை மூடினால், அதில் வேலைசெய்யும் தொழிலாளிகள் கூப்பாடு போடுவார்கள். அதனால் அமைதி யின்மையும், குழப்பமும், சமாதான பங்கமும், அதனைச் சார்ந்த பல தொல்லைகளும் ஏற்படும். கைராட்டினத்தால் அத்தகைய தொல்லைகட்கு இடம் ஏற்படாது.

இந்தியாவின் எதிர்கால அரசாட்சிக்குக் கிராமக் குடியரசே அஸ்திவாரமாய் அமைய விருப்பதுபோல, இந்தியப் பொருளாதாரமும் தொழில்வளர்ச்சியும் கிராமங்களை அஸ்திவாரமாகவும், அடிப்படையாகவும் கொண்டு நிர்மாணிக்கப் படவேண்டும்.

மக்கள் கூடிச்சேர்ந்து ஒரு சமூகமாக (கம்யூனிசம்) வாழவேண்டும் என்ற கொள்கை சிறந்ததும், ஆட்சேபிக்கத் தகாதது மாயிருப்பினுங்கூட, ஒரு மனிதன் பிற மனிதனுக்கு அடிமையாக வொட்டாமலும், தாயைச் சார்ந்து வாழும் சேயைப்போல ஒரு மனிதன் பிறமனிதனைச் சார்ந்தே வாழவேண்டும் என்று ஏற்பட வொட்டாமலும், தனி மனிதனுடைய சுதந்திரத்தைக் காத்து, சுயேச்சையான வாழ்க்கைக்கு உறுதியளித்து, அவன் விரும்பும் அளவுக்குப் பிறருடன் கூடிச் சேர்ந்து வாழும் உரிமையை அவனுக்கு நல்க வல்ல. ஆட்சியே நாகரிக ஆட்சி

N7K N47



யாகும். அத்தகைய சூழ்நிலைக்குள் வாழும் வாழ்க்கையே, இவ்வுலகில் எம்மனிதனும் விரும்பத்தக்க நாகரிக வாழ்க்கையாகும்.

மனிதன் தன் இன்றியமையாத தேவைக்கெல்லாம் பிற மனிதனையோ, இடத்தையோ, நாட்டையோ எதிர் பார்த்து வாழச் செய்வது மனித சுதந்திரத்துக்கு ஒத்த வாழ்க்கையாகாது. கோவையிலுள்ள மில்களில் ஏதோ குழப்ப மேற்பட்டவுடன், தமிழ்நாட்டின் வளர்ச்சியும் நிர் வாண கோலத்தை அடைய வேண்டிய தொழிற் திட்ட மும் அமைப்பும், எரிமலையின் கீழோ மேலோ குடியிருப் புக் கொள்வதற்கு ஒப்பாகும்.

மற்ற தொழில்கள் எப்படிப்போயினும், மனிதனுக்கு இன்றியமையாத உணவு, உடை, குடியிருப்பு ஆகிய மூன்றுக்கும் எந்தக் காலத்திலும் ஆபத்து வரத் தகாத நிலைமையில் தொழில் முறைகள் அமையப்பெறல் வேண் டும். முன் காலத்தில் நம் தேச மக்கள் "ராமன் ஆண்டா லென்ன, பரதன் ஆண்டாலென்ன" என்று இருந்தார்கள் என்று சொல்லும்போது அக்கால மனிதர் அரசியல் ஞானமும், பொறுப்பும் இல்லாதவர்களாய் இருந்தார்கள் என்று யாரும் கருதிவிட வேண்டாம். ஆட்சியில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும், மக்களுடைய அன்றாடத் தேவைகளுக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படவில்லை என்றே கருத வேண்டும்.

113657

அக்காலத்திய "பொறுப்பற்ற" நிலைமையுடன் இக் காலத்திய "பொறுப்புள்ள" நிலைமையை ஒத்திட்டுப் பார்ப்பவர்களுக்கு உண்மை விளங்கும். எங்கோ, எவனோ குண்டு போட்டவுடன், இங்கு நமது விளக்கில் (மண்) எண்ணெய் தீர்ந்துபோய் வீடே இருளண்டி விட்டது.

நகரில் எரிந்த மின்சார விளக்கும் மங்கிப் போயிற்று. இவ்வாறு இருண்டதைக் கண்டு மருண்டு, அரிசியும் பருப்பும், அவரையும் துவரையும், புல்லும் கொள்ளும், துணியும் சட்டையும், சீப்பும் சோப்பும், பௌடரும் 'பப்பும்' மாயமாய் மறைந்து எங்கெங்கோ சென்று புகலிடம் தேடிக்கொண்டன. ஒன்றுக்குப் பத்தாகப் பணம் கொடுப்பதாய்ச் சொன்னாலும் அவை பிகுவு பண்ணிக் கொண்டன. இதனாலேதான், இத்தகைய ஆபத்துகளினின்று தப்புவதற்காக ஒவ்வொரு கிராமமும், ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு மனிதரும் இயன்ற வரையில் முயன்று அவரவர் தேவையை அவரவரே பூர்த்தி செய்துகொள்ள வேண்டுமெனச் சொல்லி வந்தது, சுய தேவைத் திட்டத்தின் சுயம்பொருள் இதுதான். கதிரவனுக்கொத்த கைராட்டினம் சுழன்றால், நட்சத்திரங்களை யொத்த இதர தொழில்களெல்லாம், தாமே தம் தம்மிடத்தில் பிரகாசித்திருக்கும் என்று காந்தியார் கதறியதும் இதன் பொருட்டேயாம்.

## கைராட்டின இயக்கம்

கைநெசவாளிகள் மில் நூலைக் கண்டு மோக மதிலெய்திக் கைநூலைக் கைவிட்டதன் காரணத்தினாலே, கைராட்டினங்கள் பல கோபமுற்றுப் பரண்மீதேறின. மற்றுஞ் சில, வீட்டுத் தாழ்வாரத்தில் தொங்கலாயின. அவற்றைக் கரையான்கள் சென்று சரசம் செய்ய, அந்த அவமானத்தைத் தாங்க முடியாமல் நவகாளிப் பெண்களைப்போல் தீயில் குதித்துச் சாம்பலாயின. பரணேறிய ராட்டுகளில் சில எப்போதாவது, பணவினையின் போதோ பிணவினையின் போதோ கீழேயிறங்கி இரண்டொரு சடங்குகளில் கலந்து கொண்டபின் மீண்டும் நாணுற்றுப் பரணே கதி

யென்று இருக்கலாயின. இவ்வாறாக ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஒளிந்திருந்த ராட்டுகளைக் காந்தியடிகள் கீழே இறக்கினார்.

அவரது முயற்சியின் பயனாகத் திலகர் சுயராஜ்ய நிதிக்கென வசூலிக்கப்பட்ட ஒரு கோடி ரூபாயில், செலவானது போக மீதியிருந்த சுமார் இருபது லட்சம் ரூபாயைச் சேர்த்துப் பிடித்துச் சர்க்கா சங்கத்தை ஸ்தாபித்துப் பணத்தை அதனிடம் ஒப்புவித்தார். இத்தொகையைக் கொண்டுதான் கடந்த இருபத்தைந் தாண்டுகளாகக் கதரியக்கம் நடைபெற்று வருவது!

இந்தியாவிலுள்ள கைராட்டினங்களிலெல்லாம் தென்னாட்டுத் தமிழனுடைய ராட்டினம்தான் மிகமிகச் சிறியது. எனினும், இச்சிறிய ராட்டினத்தைக் கொண்டே தமிழன் காந்தியடிகளால் தோற்றுவிக்கப்பட்ட கதரியக்கத்தின் முன்னணியில் தனியனாக நின்று, அவரிடம் 'சபாஷ்' பட்டம் பெற்றுவிட்டான் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இச்சிறிய ராட்டினத்தின் நூற்பு வேகம் மணியொன்றுக்கு 250 கெஜத்துக்குமேல் போகவில்லை. அதில் நூற்கப்பட்ட நூலும், சமமும் போதுமான முறுக்கும் இல்லாதிருந்த காரணத்தால் பலங் குறைந்து, கதரும் சீக்கிரம் கிழிவதா யிருந்தது. அந்நூலை நெசவுகாரன் இழைத்துப் பாவோடி, கஞ்சிவைத்துப் பதமாக்கி, உலர்த்திப் பண்ணையில் பிணைத்துத் துணியாக்குவதில் அதிக சிரமப் படவேண்டி யிருந்தது. எனினும், அவனும் தமிழனாதலால் மிகவிரைவில் கைதேர்ந்து, அகில இந்தியாவின் புகழுக்கும் பாத்திரமானான். அவன் என்னதான் தேர்ச்சியடைந்தாலும், கல்லாங் காட்டுப்பாதையில், வில்லில்லாத வண்டியில்

பூட்டிய இடக்குச் செய்யும் கிழட்டுக் குதிரையைச் செலுத்துவது போலவே சிரமப் பட்டுவந்தான்.

சமமும் முறுக்குமுள்ள நூலாக மணிக்கு 1000 கெஜம் நூல் நூற்கவல்ல கைராட்டின மொன்றைச் செய்து கொடுப்போருக்கு ஒரு லட்ச ரூபாய் பரிசளிப்ப தாகக் காந்தியடிகள் விளம்பரம் செய்தார். குறித்த காலத்தில் அத்தகைய ராட்டினமொன்றை யாரும் செய்து கொடாததால் பரிசுத்தொகையை இரண்டு லட்சமாக உயர்த்திக்காலக்கெடுவையும் நீட்டி வைத்தார். வருடம் பலவாகியும் இன்னும் யாரும் இம்முயற்சியில் வெற்றி பெற்றூரில்லே.

இருக்கும் ராட்டினத்துக்கே சக்தியை அதிகப்படுத்த முடியாதா வென்று ஆராய்ந்து ஆராய்ந்து இறுதியில் சில மாறுதல்கள் செய்ய முடிந்தது. சிறிய இரும்புருளேகள் போட்ட கதிர்கள் செய்து கொடுத்ததால், கதிரின் வேகம் சுற்றுக்கு 40 ஆக இருந்தது 60 ஆக ஆகி, அதன் காரண மாகநூலின் முறுக்கும் சற்று அதிகமாயிற்று. அதன் பின், ராட்டினத் தண்டின் நடுவே மற்றோர் இடைச்சக்கரம் வைத்து அமைத்ததால், நூற்புவேகத்தை மணிக்கு 420 கெஜம் வரை உயர்த்த முடிந்தது. எனினும், நூற்ற நூலில் திண்டும் திரிசும் இருந்ததால் அதைத்தவிர்க்கும்பொருட்டு மிஷினில் அரைத்த பஞ்சை அறவே விலக்கி, கைமணேப் பஞ்சையே உடயோகிப்பதென்ற முடிவுக்கு வந்து, பரண் மீதிருந்த கைமணேகளேயெல்லாம் கீழே இறக்கிப் புதுப் பித்தும் புதிய மணேகளே ஆயிரக் கணக்கில் செய்து கொடுத்தும், எல்லா நூற்பவர்களும் கைமணேப் பஞ்சையே உபயோகிக்கச் செய்யமுடிந்தது. மற்றும், கழிகழியாக அளவில்லாமல் சுற்றப்பட்டுவந்த நூலே, அளவு படுத்

தும் பொருட்டு 840 கெஜங்கொண்ட சிட்டங்களாக எண்ணி வீசுவதற்குற்ற பயிற்சியும், புதிய வீசனங்களும் எல்லா நூற்பவர்களுக்கும் அளிக்கப்பட்டன. புதிய சக்கரத்தின் அமைப்பாலும், பஞ்சைக்கொட்டும் வில்லையும், அதிலேற்றும் நரம்பையும் சீர்திருத்தம் செய்ததாலும் தமிழ் நாட்டில் 14 நெம்பருக்கு மேல் போகாதிருந்த நூல் 40 நெம்பர் வரை மெலிந்தது. இந்நூலைக் கொண்டு மெல்லிய ரகங்களும் தயாரிக்க முடிந்தது. மேற்கூறிய அபிவிருத்தி முறைகள், என்னுல் 1935-ல் ஆரம்பிக்கப்பட்டு 1940-வருட இறுதியில் பூரணமாக்கப்பட்ட விபரங்களைக் குடிநூல் படித்த தமிழர்கள் மறந்திருக்கமாட்டார்கள். நீண்டகாலமாக நஷ்டத்தில் வேலை செய்திருந்த சர்க்கா சங்கத்தை இலாபகரமாக வேலை செய்வித்து, என்னிடம் ஒப்புவிக்கப்பட்ட மூன்றேமுக்கால் லட்சம் ரூபாயை ஒன்பது லட்சமாகப் பெருக்கிக் கொடுத்துவிட்டு, 1940-ம் ஆண்டின் முடிவில் நான் தமிழ்நாட்டுச் சர்க்கா சங்கத்துக்கு 'ஜே' போட்டு விலகியதையும் தமிழர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

நான் விலகிய வருஷத்திலும், அதன் முன் பல வருஷங்களிலும் தமிழ் நாட்டில் ஆண்டொன்றுக்குச் சுமார் முப்பது லட்சம் சதுர கெஜம் கதர்தான் உற்பத்தியாகி வந்தது. அக் காலத்தில் அவ்வாறு உற்பத்தியான கதரை விற்கப் பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டியிருந்தது என்பதையும் தமிழர்கள் மறந்து போயிருக்க மாட்டார்கள்.

ஆனுல் நான் விலகிய பின்னர், பலவேறு காரணங்களால் கதருக்கு என்றுமில்லாத அளவு உற்சாகமும், தேவையுமேற்பட்டுள்ள கடந்த ஆண்டுகளில், சர்க்கா

சங்கம் அதே முப்பது லட்சத்தில் ஊசலாடிக் கொண்டிருப்பது பரிதபிக்கத்தக்க விஷயமாகும். தேவைக்கேற்ப உற்பத்தியைச் சர்க்கா சங்கம் ஏன் விஸ்தரிக்கவில்லையென்பது எனக்கு விளங்கவில்லை.

இது நிற்க, காந்தியடிகள் சிறையினின்று வெளி வந்தபின், கடந்த ஒன்றரை ஆண்டுகளாகச் 'சுயதேவை' 'சுயதேவை' என்றும், எல்லோரும் நூல் நூற்கவேண்டுமென்றும், நூல் நூற்றுக் கொடுத்தவர்களுக்கே கதர் வழங்கவேண்டுமென்றும், பலமான கூச்சலும் கடினமான சட்டதிட்டங்களும் ஏற்பட்டுள்ளன.

தமிழ் நாட்டுச் சர்க்கா சங்கத்தை நான் நடத்திய காலத்தில் எவ்விதக் கூச்சலும், ஆரவாரமுமின்றிச் சுயதேவைத் திட்டம் மிக வெற்றிகரமாக அமல் நடத்தப் பட்டு வந்தது என்ற விபரங்களை எனது அறிக்கைகளில் தமிழர்கள் பார்த்திருப்பார்கள். மகாத்மா காந்தியும் அவற்றைப் படித்தறிந்து ஆனந்தப்பட்டதுண்டு. அக்காலத்தில் உற்பத்தியான முப்பதுலட்சம் சதுரகெஜத்தில், நூற்பவர்களுக்கும் அவர்கள் குடும்பத்துக்காகவும் பத்து லட்சம் சதுர கெஜத்துக்கு மேற்பட்ட துணி விநியோகப் பட்டுள்ளது. நூற்போர் தந்த நூலைப் பெற்று, அவர்கள் சொந்த உபயோகத்துக்கென வருடம் 40,000 புடவைகள் நெசவு செய்து நூற்போருக்கு வழங்கப்பட்டன! நூல் உற்பத்திப் பிரதேசங்களில் விற்பனைக்காக அனுப்பட்ட ஜவுளிகளுக்கு, ரூபாய் அணுப் பைசாவாக விலை போடாமல் சிட்டங்களாகவே விலையிடப்பட்டது. இவ் விவரங்களையெல்லாம் நான் நடத்திவந்த 'குடிநூல்' படித்தோர் நன்கறிந் திருக்கலாம். ஆனால், அந்தோ! எனக்குப் பின்வந்த புத்திசாலிகள் என்னால் உருவாக்கப்பட்டு, வேர்

பற்றிவந்த சுயதேவைத் திட்டத்தையே குழி தோண்டிப் புதைத்துவிட்டனர். அதன்காரணம் யாதெனக் கடவுளே அறிவார்!

சொந்தத் தேவைக் கென நூல் சேகரிப்பதைக் கை விட்டார்கள்! நூற்போருக்குப் புடவை நெசவு செய்து கொடுப்பதை நிறுத்தினர்கள்! நூற்போர் குடும்பங்களுக்கும், கிராம வாசிகட்கும், சுயதேவைக் கெனவே நூல் நூற்கும் பிறருக்கும் நூலைப் பெற்றுக்கொண்டு கதராகக் கொடுத்து வந்த பண்டமாற்று முறைக்கும் உலைவைத்தார்கள்! கையினுல் பருத்தி அரைப்பதை நிறுத்திக் கைமணைகளைக் கழுவிலேற்றிவிட்டு, 'புரோச்' என்ற நகரில் மிஷினில் அரைபட்ட குப்பைப்பஞ்சை வரவழைத்து நூற்போருக்கு வழங்கினுர்கள்! சில இடங்களில், வெகு சிரமத்துடன் செய்து பழகிய சிட்டங்களையும் விடுத்து நூலைக் கழியாகவும் வீச ஏற்பாடு செய்தனர்! இவ்வாறெல்லாம் செய்யத் துணிந்தவர், வாலிபர் உள்ளத்தின் ஆழத்தைக் காணப் புகுந்த உள்ளம் வறட்சியுற்ற என்நண்பர் ஒருவர்! ஒரு காலத்தில் கதரைக் கொளுத்திக் காங்கிரசையும் காந்தியையும் காய்ந்தவர்! பின்னர், மீண்டும் கதரைப் போர்த்துக்கொண்டு காங்கிரசில் நுழைந்து கதர்ப் பிரசாரம் செய்தவர்; மீண்டும் பழைய குருடி கதவைத் திறடி யெனக் கதரைத் தூக்கி யெறிந்துவிட்டு அதனைப் பரிகாசம் செய்து திரிபவர்!

"வாத்தியார் நின்றுகொண்டு மண்டால் பிள்ளைகள் ஓடிக்கொண்டு மள்ளுவார்கள்" என்று சொல்வதற்கிணங்கக் கதருக்கு வழிகாட்டியாய் நின்ற சர்க்கா சங்கம் மிஷினில் அரைபட்ட குப்பைப் பஞ்சை உபயோகிக்க ஆரம்பித்தவுடன், இலாபத்தையே குறிக்கோளாகக்

கொண்ட கதர் வியாபாரிகள், நூற்பு மில்களில் கழிவு பெறும் "போண்டாஸ்" என்ற பஞ்சுக் கூளத்தை வாங்கி உபயோகித்துக் கதரையே குட்டிச் சுவராக்கி விட்டார்கள். இனிக் காலம் செழிப்படைந்து இதர துணிகள் மார்க்கட்டில் தாராளமாக நுழைய வாரம்பித்தால், இன்று கதர் அணிபவர்களில் 100-க்கு 90 பேர் கதர் என்றதும் காதவழி ஓடினார்களானால், அதில் யாரும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

## சென்னை சர்க்காரின் கதர்த் திட்டம்

சென்னை அரசாங்கத்தின் பிரதம மந்திரியாகிய கனம் பிரகாசம் பந்துலுகாரு அவர்கள் எனக்குப் புதிதானவர் அல்ல. அவருக்கு நானும் புதியவன் அல்ல. அவர் கதரைக் கட்டி நிறுத்த ஏதோ திட்டம் போட்டுக்கொண்டிருக்கிறாரெனப் பத்திரிகைகளில் பார்த்ததும், அத்திட்டத்தின் நகலொன்று அனுப்பும்படி அவருக்குக் கடிதம் எழுதினேன். திட்டத்தின் அச்சான பிரதிகளெல்லாம் தீர்ந்து விட்டனவென்றும், அத்திட்டத்தின் முக்யமான அம்சங்களெல்லாம் பத்திரிகைகளில் வெளிவந்து விட்டதென்றும், அதையே நான் பார்த்துக்கொண்டால் போதுமென்றும் அவருடைய காரியாலயத்திலிருந்து பதில் வந்தது! எனவே, பத்திரிகைகளில் பார்த்ததற்குமேல், பிரகாசத்தின் கதர்த் திட்டத்தின் விபரமொன்றும் நான் அறிவதற்குச் சாத்தியமில்லாமல் போய்விட்டது.

அவரது கதர்த் திட்டம் தற்சமயம் எனது ஜில்லாவில், வெள்ளகோவில் பிர்க்காவில் ஆரம்பித்து நடத்தப்படுகிறதாக நான் அறிகிறேன். இந்தப் பிர்க்காவில் பலவாண்டுகளுக்கு முன்னரே சர்க்கா சங்கம் பல நூற்புக்கிளைகள் ஏற்படுத்திக் கதரை அபிவிருத்தி செய்

துள்ளது. மற்றும் பல வியாபாரிகளும் இப்பிர்க்காவெங்கும் சூழ்ந்திருக்கின்றனர். இந்நிலையில், பிரகாசம் சர்க்கார் இப்பிர்க்காவில் நுழைந்து என்னத்தைச் சாதிக்கப்போகிறதென்று எனக்குத் தெரியவில்லை.

சர்க்கா சங்கம் இதுவரை செய்துவந்த வேலையைப் பிரகாசம் சர்க்கார் இப்போது அந்தப் பிர்க்காவில் செய்து வருகிறதாம். அதாவது, எந்த மில்களை அவர்கள் ஒழிக்கவேண்டுமெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்களோ, அந்த மில்களின் பேரக் குட்டியான ஜின்னிங் பாக்டரிகளில் அரைக்கப்படும் குப்பை கூளங்கள் நிறைந்த பஞ்சை விலைக்கு வாங்கி, அதை ஏற்கெனவே நூல் நூற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு விலைக்கு விற்று, அவர்களால் நூற்றுவரும் நூலை விலைகொடுத்து வாங்கி, அந்நூலை ஏற்கெனவே கதர் நெசவு செய்துகொண்டிருக்கும் நெசவுகாரர்களுக்குக் கொடுத்து, அவர்கள் நெசவு செய்துவந்து கொடுக்கும் துணியை இவர்கள் விற்கப் போகிறார்களாம்! இதற்காகப் பல ஆபீசர்கள், குமாஸ்தாக்கள், சிப்பந்திகள் முதலானோர் அமர்த்தப்பட்டிருக்கலாம். இதில் கதரைப் பரப்பும் கொள்கை என்ன இருக்கிறதென எனக்குப் புரியவில்லை. இப்பொழுது இந்தப் பிர்க்காவில் உற்பத்தியாவதைவிட சர்க்காரின் முயற்சியால் உற்பத்தி சிறிதளவு அதிகமாகிவிடும் என்பதாகவே வைத்துக்கொண்டாலும், அதனால் என்ன பிரமாதமான பலன் ஏற்படப்போகிறதென எனக்கு விளங்கவில்லை.

இந்த லட்சணத்தில் எவனோ ஒருவன், தான் மணமுடிக்கப் போகும் பெண்ணுக்குப் பரிசம் போட்டவுடனே, தன் எதிரியின்மீது படையெடுக்கத் தன் குமாரர்

களை அனுப்பப்போவதாகத் தூதுவன்மூலம் அறிவித்த கதை மாதிரி, பந்துலுகாரு அவர்களும் வெள்ளகோவில் வீராயிக்குப் பஞ்சு கொடுத்தவுடனே மில்கள்மீது படையெடுக்கப் போவதாகக் கதைக்க வாரம்பித்துவிட்டார்!

தமிழ்நாட்டுச் சர்க்கா சங்கம் கடந்த ஆறு வருஷங்களில் கதர் உற்பத்தியைப் பெருக்க முடியாமற் போனதற்குக் காரணம், அது தனது உற்பத்திக் கேந்திரங்களை விஸ்தரிக்காம லிருந்ததுதான். வியாபாரிகளாவது புதிய பிரதேசங்கட்குச் சென்று நூற்புத் தொழிலை விஸ்தரிக்க முயற்சி செய்தார்களா என்றால், அதுவும் இல்லை. அவர்களும் குண்டு சட்டியில் குதிரை ஓட்டின மாதிரி ஒருவர் வாலை ஒருவர் பிடித்துக்கொண்டு, ஒரே நூற்பவளிடத்தில் பலபேரும் பஞ்சு கொடுத்து நூல் வாங்க முயற்சிசெய்து, கதர்த் துணியைக் கோரப் பாயைப் போலாக்கி விட்டார்கள். இன்று கதரைப் பெருக்கி மில்லுக்கு உலைவைப்பதாகக் கொக்கரிக்கும் சென்னை சர்க்காரும் பிறரின் வாலைப் பிடித்துக்கொண்டே கரையேறப் பார்ப்பது விசித்திரமாய் இருக்கிறது! இவர்கள் துணிகரமாகப் புதிய இடங்களில் பருத்தியும் ராட்டும் கொடுத்துப் புதுக் கைகளை நூற்கப் பழக்க முயற்சிப்பதாயிருந்தால் அதற்கோர் அர்த்தமிருக்கும். அதைவிடுத்து, உழுத காட்டையே உழுகப் புறப்பட்டிருப்பது விந்தையாக இருக்கிறது.

இன்று தமிழர்கள் நூற்பதற்குத் துடியாய்த் துடிக்கிறார்கள். காலையிலிருந்து மாலைவரை கைராட்டினம் எங்கே கிடைக்கும் என்று கேட்டுத் திரிகிறார்கள். ஏதாகிலுமொரு பழைய ராட்டையுள்ளவர்கள் கதிருக்கும்

பட்டைப்பஞ்சுக்கும் அலைகிறார்கள். இவர்களுடைய உற்சாகத்தையும் நூற்பதற்குள்ள ஆவலையும் பயன்படுத்தினால், அதாவது அவர்கட்கு வேண்டிய நூற்புக் கருவிகளும் பஞ்சும் ஊர்கள்தோறும் கிடைப்பதற்கு உடனடியாகச் சர்க்கார் ஏற்பாடு செய்தால் எல்லோரும் நூல் நூற்க ஆரம்பித்து விடுவார்கள்.

இவ்வாறு நாடெங்கும் நூற்கப்படும் நூலைச் சேகரித்து ஆங்காங்கு துணியாக நெசவு செய்து கொடுப்பதற்கோ, அல்லது நூலுக்கு விலைபோட்டு எடுத்துக்கொண்டு நெசவான துணிகளை விற்பதற்கோ, நெசவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அச்சங்கங்களுக்குச் சர்க்கார் ஏதேனும் மானியம் கொடுத்து உதவினால், கதர் வெகுவாகப் பரவ அநுகூலித்ததா யிருப்பதுடன், நெசவுகாரர்கட்கும் உதவி புரிந்ததா யிருக்கும்.

சர்க்கார் மனது வைத்தால் இது பெரிய காரியமல்ல. சர்க்காரின் தொழில் இலாகாவைக்கொண்டே நூற்புக் கருவிகள் செய்து விநியோகம் செய்யமுடியும். நெசவு சங்கங்களைக் கூட்டுறவு முறையில் நிறுவிவிட்டால் கணக்கு வழக்குகள் ஒழுங்காகவே இருக்கும். கதர்ப் பாவு செய்து நெய்வதில் கைப்பழக்கப்பட்ட தறிகாரர்களின் உதவியைக்கொண்டு, பழக்க மில்லாவதர்களுக்குப் பயிற்சியும் அளித்து விடுவது சுலபம்.

நான் சர்க்கா சங்கத்தின் காரியதரிசியாய் இருந்தபோது பிரதம மந்திரியாயிருந்த ராஜாஜி, நூற்பவர்களுக்குப் புதிதாகச் செய்து வழங்கப்படும் நூற்புக் கருவிகளின் விலையில் சரி பகுதியைச் சர்க்காரிலிருந்து மான்யமாகக் கொடுத்து உதவினதுடன், ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் நான் உற்பத்தி செய்ய முடிந்த கதருக்கும்

கெஜத்துக்கு இவ்வளவென ஒரு மான்யமும் கொடுத் துதவினர். இதேபோன்ற ரீதியில் இன்னும் சற்றுப் பெரிய அளவில் சர்க்கா சங்கம் உள்பட, கூட்டுறவு சங்கங்கள், கட்டுதிட்டங்கட்கு அடங்கி நடக்க ஒப்புக் கொள்ளும் வியாபாரிகள் முதலானவர்கள் மூலமாகக் கதர் உற்பத்தியை விஸ்தரித்துப் பெருக்க, சர்க்கார் எவ் வளவோ செய்யலாம். இதையெல்லாம் விடுத்து இங்கொரு மூலையிலும் அங்கொரு மூலையிலும் சர்க்கா சங்கம் நடத்தி வந்த வேலையைச் சர்க்கார் ஏற்று நடத்துவதற்காக இவ் வளவு பெரிய கூச்சலும், ஆர்பாட்டங்களும், மூன்று கோடி ரூபாயும் அநாவசியமாகும்.

மேலே கூறிய முறையில் சர்க்கார் கதருக்கு உதவி யளிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டால், கதருக்கு வேண்டிய சூழ்நிலை தானாகவே ஏற்பட்டுவிடும். இந்த உருப்படியான வழியை விட்டுவிட்டு, மணலைக் கயிருய்த் திரிக்கப் போகிறேன், வானத்தை வில்லாய் வளைத்து ஒடிக்கப் போகிறேன், மில்களை யெல்லாம் ஒழித்துக் கட் டப்போகிறேன் என்று பிரதமர் பிரமாதமாய்ப் பேசித் திரிவது வெறும் வெத்து வேட்டாகவே வெடிக்கப் போகிறது என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம். மகனுக்கு மணவினை தீருமுன்பே, பிரகாசம்காரு தன் பேரனுக்குப் பெண்தேடப் புறப்பட்டு விட்டார்!

## முடிவுரை

மீண்டும் கடைசியாக ஒரு வார்த்தை. முன்சொன்னதை மீண்டும் மீண்டும் சொல்வதால் அதன் முக்யத்வம் அதிகமாகிறது. கதரியக்கம் உருப்படவேண்டுமானல் இவ்வார்த்தைக்கு முதன்மையான முக்யத்துவம் கொடுத்து, முதலாவதாகக் காரியத்தில் முனையவேண்டும். கதரியக்கம் வெற்றிபெறுவதும், தோல்வியுறுவதும் இந்த ஒரு காரியத்தைப் பொறுத்திருக்கிறது. மணிக்கு ஆயிரம் கெஜத்துக்குக் குறையாமல் நூல் நூற்கவல்ல ஒரு ராட்டினத்தைச் செய்து முடிக்க உடனே முயற்சி செய்யவேண்டும். ஒருத்தி தன் துணித் தேவைக்கு நாளெல்லாம் நூற்றுக்கொண் டிருக்க முடியாது. எல்லோரும் நூல் நூற்கவேண்டும் என்பது காந்தியடிகளின் விருப்பம். அவ்விருப்பம் நிறைவேறவேண்டுமானல், ஓய்ந்த நேரத்தில் தான் ஒவ்வொருவரும் நூல் நூற்கமுடியும். ஆதலால் மிகக் குறைவான நேரத்தில் அதிகமான நூல் இழைக்க வல்ல ராட்டினம் அமைத்தே ஆகவேண்டும்.

நூற்கும் அளவுமட்டும் அதிகமாக இருந்தால் போதாது. நூற்கும் நூல் சமமாகவும், நெசவுக்கும் நீடித்த உழைப்புக்கும் ஏற்ற முறுக்குள்ளதாகவும் இருக்க வேண்டும். அவ்விதம் இருந்தால்தான், நெசவுகாரன் மனம் நோகாமல் நியாயமான அளவு நெய்தெடுக்க முடியும். மில் நூலுக்குச் சமமாகக் கைநூல் இல்லையானல், மில் நூலைப்போல் அதிகமாக நெசவு செய்ய முடியாத காரணத்தினல் நெசவுகாரர் அதைக் கையாலும் தொடமாட்டார்கள். அப்படி அவர்கள் தொட்டாலும், அவர்களால் குறிப்பிட்ட அளவு நெய்ய முடியாததால் அதிகப்படியான கூலியே கேட்பார்கள். அதிகக் கூலி

கொடுத்துக் குறைவான துணி நெய்யச் செய்வது பொரு ளாதாரமல்ல. அங்கிலேயில், கதர் ஒருவகையில் அர்த்த மற்ற பொருளாகிவிடும். ஆதலால், முதலில் கவனிக்க வேண்டிய விஷயம் கைராட்டினம்.

திறமையாக நூற்கவல்ல ராட்டினம் மட்டும் வாய்த் தாலும் போதாது. பருத்தியைக் கொட்டை நீக்குவதற் கும், விசும்பைப்போல் அதன் துசும்பைத் தெளிவடையச் செய்வதற்கும், பட்டை போடுவதற்கும் இப்போதுள்ள மணைகளாலும் வில்களாலும் பிரயோஜனமில்லை. ஆத லால், நல்ல நூல் நூற்பதற்கு அடிப்படையான இக்கருவி களையும் நூதன முறையில் அமைத்தாக வேண்டும்.

கைத் தையல் வேலையை எளிதாக்கிய சிங்கர் தையல் மிஷினைப்போல், கையால் நூற்பதை எளிதாக்க வல்ல ஒரு சிறிய, அழகும் உறுதியும் உள்ள, அதிகச் சிக்கல் இல்லாத ஓர் இயந்திரம் வேண்டும். இத்தகைய ஓர் இயந் திரத்தைச் செய்து கொடுப்போருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசளித்தாலும் தகும்; அதற்குமேலானாலும் பாதக மில்லை. ஒன்றுக்கு முதவாத மரத்தைக்கொண்டு, ஒரு லட்சம் ராட்டைகளுக்கு ஒன்பது லட்சம் ரூபாய் ஏற் கெனவே சென்னை சர்க்கார் செலவு செய்தாகி விட்டதாகத் தெரியவருகிறது. இதைப்போன்ற ராட்டைகள் செய்யப் பிரகாசம் காரு அரசாங்கப் பணத்தை மேலும் செலவு செய்யாமல், நான் மேலே சொன்னமாதிரி ராட்டினம் செய்ய உலகெங்கும் விளம்பரம் செய்தாக வேண்டும். கதரில் பரம பக்தியும் நம்பிக்கையுமுள்ள பிரகாசம் காரு, இதற்கென ஆகாயக் கப்பலில் பறந்து உலகத்தை வலம் வந்தாலும் நல்லதுதான்.

இம்மாதிரியான ஒரு நல்ல ராட்டினத்தைக் கண்டு பிடித்துப் பெருவாரியான அளவில் செய்து, வீட்டுக்கு வீடு விநியோகம் செய்துவிட்டால், ஒரே மாதத்திற்குள் பிரகாசம் காருவின் பெரு முயற்சி யில்லாமல் மில் முதலாளிகள் தங்கள் மில்களையெல்லாம் இழுத்துப் பூட்டிச் சாத்திவிட்டு எங்கேனும் குடிபோக ஆரம்பித்து விடுவார்கள். வெள்ளை முதலாளிகளும் வெகு சீக்கிரமாகக் கப்பலேறி விடுவார்கள். அதற்கப்புறம் மந்திரி பாஷ்யம் அம் மில்களை யெல்லாம் பிரித்தெடுத்து, பெட்டிகளில் போட்டு அடைத்துக் கப்பலேற்றிக் கொண்டுபோய், எங்கேனும் யாருக்கேனும் எவ்விலைக்கேனும் விற்க முடியாவிட்டால், கடலில் தள்ளிவிட்டுத் திரும்பலாம்.

13-5-96

23A
4-73

WRAPPER PRINTED AT JOTHI PRESS, MADRAS.